
# Bulletin

## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## கிறிஸ்து பிறப்பு (யல்தா) திருநாள் நல்வாழ்த்துக்கள்



மலர் 20 டிசம்பர் 2023 இதழ் 12

Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only

**Malankara School of Word and Worship**

*Eparchy of Marthandam*

*Offers*



**Diploma Course in Theology**

1 year

**Begins on JANUARY 6, 2024**

**Venue**
Bishop's House
Vettuveni

**Timing**
Every Saturday
9.30 am to 12.45 pm

**Contact**
Fr. Vibins Wilson
Co-ordinator
8807222505

To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

## இம்மாதம் நினைவு கூர

டிசம்பர் 2023

1 – இருபத்தைந்து நோன்பு ஆரம்பம்

3 – தூய இறை அன்னை எலிசபெத்துடன் சந்திப்பு


4 – புனித பிரான்சிஸ் சவேரியார்

4 

5 – தமஸ்கு நகரத்து மார் யோவான்

மார் சாபாஸ், அலெக்ஸாந்திரியகாரராகிய மார் கிளீமிஸ்

6 – அந்தியோக்கியக்காரராகிய மார் தியோபிலோஸ்

5 

7 – புனித அம்புறோஸ்

8 – புனித கன்னிமரியாவின் அமலோற்பவத் திருநாள்

10 – புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு

மார் பஹனானும் சகோதரி சாறாளும் 40 இரத்தசாட்சிகளும்

14 – புனித சிலுவை யோவான்

புனித ஆபிரகாம் கிதுனோயோ


8 

16 – மார்த்தாண்டம் மறைமாவட்டம் உதயமான நாள் (1996)

17 – புனித யோசேப்புக்குக் கிடைத்த காட்சி

மார் இரபுலா

விவிலிய ஞாயிறு


25 

18 – மயிலாப்பூர் அற்புத சிலுவை

24 – யல்தாவுக்கு முன்னைய ஞாயிறு

25 – யல்தா திருநாள் (கிறிஸ்துமஸ்)

26 – தூய இறையன்னையின் புகழ்ச்சி

26 

27 – குழந்தைகள் கொலையுண்ட தினம்

28 – அரசரும் இறைவாக்கினருமான தாவீது

31 – யல்தாவுக்குப்பின் முதல் ஞாயிறு



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 20 டிசம்பர் 2023 இதழ். 12

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

# BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***
***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***
***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***
***Diocese of Marthandam***



**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

Cir.No.3/2023 23.11.2023

## CIRCULAR

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே, அருட்சகோதரர்களே, அருட்கன்னியர்களே, இறைமக்களே,***


மறுவொன்றிப்பையும் மறைத்தூதுபணியையும் சிரமேற்கொண்டு பயணிக்கும் மலங்கரை கத்தோலிக்க திருச்சபை தனது நூற்றாண்டு விழாவை கொண்டாட ஆயத்தம் செய்கிறது. மலங்கரை திருச்சபையின் மறைத்தூதுபணியால் மார்த்தாண்டம் மறைமாவட்டம் உதயமானது. 25 ஆண்டுகள் கடந்த இந்த தலதிருச்சபை இன்று 21 வருவாய் மாவட்டங்களை தன்னுள் கொண்டு செயல்பட்டு வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். தமிழ் மண்ணில் வேரூன்றிய இத்திருச்சபை தனக்கே உரித்தான வழிபாட்டு முறையை கொண்டுள்ளது. தனித்தியங்கும் தன்மை படைத்த தமிழ் மொழியில் மலங்கரை கத்தோலிக்க திருச்சபை பயன்படுத்தும் வழிபாட்டு முறையின் முக்கிய நூல்கள் அனைத்தும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. இறைவார்த்தையை ஆழமாக கற்று நம்பிக்கையில் வளரவும் நம்பிக்கையின் வெளிப்பாடாகிய வழிபாட்டில் ஆண்டவரை அனுபவமாக்கி கொள்ளவும் சுறியானி பாரம்பரியத்தை வரும் தலைமுறைக்கு பகிர்ந்து கொடுக்கவும் அவற்றை பற்றிய புரிதல் இன்றியமையாதது. இத்திருச்சபை தமிழகத்தில் மேலும் வளர வேண்டுமானால் இத்திருச்சபையின் தனித்துவத்தையும் வழி பாட்டையும் சுறியானி மொழியையும் தமிழ் கலாச்சாரத்தையும் ஆழமாக கற்க வசதிகளை செய்ய வேண்டியது திருச்சபையின் கடமை என எண்ணுகிறேன்.

இறைவார்த்தையிலும் திருவழிபாட்டு ஆன்மீகத்திலும் வளர மறைமாவட்ட வெள்ளி விழாவின் போது Malankarai School of Word and Worship என்ற அமைப்பை தொடங்குவதாக அறிவித்தது அனைவருக்கும் தெரிந்ததே. திருவிவிலியம், ஆராதனை, தமிழ்மொழி, சுறியானி மொழி போன்றவற்றிலும் இறையியலிலும் கீழைதிருச்சபைகளை பற்றிய அறிவிலும் வளர இந்நிறுவனம் அனைவருக்கும் துணைநிற்கும். 2024-ம் ஆண்டு இரண்டு பயிற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன: i) ஓராண்டு நீடித்து நிற்கும் Diploma இறையியல் கல்வியும் ii) ஆலயங்களில் இசை மீட்டுபவர்களுக்கான திருஇசை குறித்த பயிற்சியும் வழங்கப்படுகிறது. இதனை பற்றிய கூடுதல் விவரங்களை அருட்தந்தை விபின்ஸ் வில்சன் அவர்கள் வழங்குவார்கள். அன்பு அருட்தந்தையர்கள் தங்கள் பங்கு தளங்களிலுள்ள பொதுநிலையினரையும், ஆலயத்தில் இசை மீட்டுபவர்களையும் இப்பயிற்சிக்காக அனுப்பி வைக்க அன்புடன் கேட்டு கொள்கிறேன். அருட்சகோதரிகளும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம். Diploma பயிற்சி நிறைவு செய்து சான்றிதழ் பெறுபவர்களுக்கு மறைக்கல்வி ஆசிரியர்களாக செயல்பட முன்னுரிமை வழங்க வேண்டும். அதுபோலவே திருஇசை பயிற்சி பெற்றவர்களுக்கு ஆலயத்தில் இசை மீட்ட முன்னுரிமை வழங்க வேண்டும்.

நம்பிக்கையை ஆழமாக அறிந்து ஆராதனைகளில் அதனை அனுபவமாக்கி அன்பு செயல்களில் அதனை வெளிப்படுத்த இம்முயற்சி காரணமாக அமையட்டும். இப்பயிற்சிகளில் பங்கேற்போர் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானது.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*அன்புடன்,*



**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்



# குருக்கள் கூடுகை

**மாதாந்திர தியானம்**

மறைமாவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானம் ஆயர் இல்லத்தில் வைத்து 07.11.2023 அன்று நடைபெற்றது. இத்தியானத்தை Rev. Fr. Bascar - Holy Family Congregation அவர்கள் வழிநடத்தினார்கள். தொடர்ந்து ஆயர் அவர்களின் அருளுரையோடு கூடுகை நிறைவுற்றது.

# இளம் குருமடச் செய்திகள்

**அனைத்து புனிதர்கள் விழா கொண்டாட்டம்**

நவம்பர் மாதம் 1-ம் தேதி குருமடத்தில் "அனைத்து புனிதர்கள் விழா" அதிபர் தந்தையின் தலைமையில் துணை அதிபர் தந்தையின் முன்னிலையில் நடைபெற்றது. இத்தினத்தை சிறப்பிக்கும் வண்ணம், குருமாணவர்கள் புனிதர்களை போல வேடம் அணிந்து, புனிதர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை விவரித்தனர்.

கடந்த ஆறு மாத காலம், இளங்குருமடத்தில் களப்பணியாளராக பணியாற்றிய அருட்சகோதரர் அபிலாஷ் அவர்கள் நவம்பர் மாதம் 2-ம் தேதி தன்னுடைய களப்பணியை இளங்குருமடத்தில் நிறைவுச் செய்துவிட்டு ஆயர் இல்லத்தில் தன் களப்பணியை ஆற்றச் சென்றார். அவருக்கு இளங்குருமடம் சார்பில் நவம்பர் 1-ம் தேதி, வாழ்த்து கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்சகோதரர் அவர்களுக்கு வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது.

## *Arts Day*

2023-2024-ஆம் கல்வியாண்டின், புனித எஃப்ரேம் இளங்குருமட குருமாணவர்களுக்கான கலைவிழா நவம்பர் மாதம் 13-ம் தேதி கொண்டாடப்பட்டது. குருமாணவர்களின் கலை திறனை வெளிகொணரும் விதமாக பாடல் போட்டி, ஓரங்க நாடகம், பேச்சுப் போட்டி, மாறுவேடப் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.

## Staff Meeting

இவ்வாண்டின், இளங்குருமடத்தின் Staff Meeting நவம்பர் மாதம் 16-ம் தேதி, மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் புனித எஃப்ரேம் இளங்குருமடத்தில் வைத்து நடத்தப்பட்டது. இதில் குருமடத்தில் ஆசிரியர்களாக பணியாற்றும் அனைத்து அருட்தந்தையர்களும் அருட்கன்னியர்களும் கலந்து கொண்டனர்.

### அனுபவ பகிர்வு

மறைபரப்பு பணி ஆவலை இளம் அருட்சகோதரர்களுக்கு ஏற்படுத்தும் விதமாக, இம்மாதம் 24-ம் தேதி புனித எஃப்ரேம் இளம் குருமடத்தில், ''மறைபரப்பு பணி அனுபவ பகிர்வு'' நடத்தப்பட்டது. இதில் திரு. கிறிஸ்டல் ஆன்றணி மற்றும் வேதியர். திரு. சத்திய நேசன் அவர்கள் தங்கள் மறைபரப்பு அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

# மறைபரப்பு தள செய்திகள்

மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்கு வெளியே உள்ள மறைபரப்பு தளங்களின் வளர்ச்சி குறித்தும் புதிய மறைபரப்பு தளங்கள் ஆரம்பித்தல் குறித்தும் சிந்தித்து தீர்மானம் எடுப்பதற்காக 14-10-2023 அன்று குழித்துறை மேய்ப்புபணி நிலையத்தில் வைத்து மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அதில் மறைபரப்பு பணித்தளங்களில் பணிபுரிந்து வரும் அருட்தந்தையர்கள், பொதுநிலை மறைபணியாளர்கள் 13 பேர் கலந்துகொண்டார்கள்.

30-10-2023 திங்கள்கிழமை அன்று மறைமாவட்ட கூரியா உறுப்பினர்களும், மறைபரப்பு பணித்தளங்களில் பணிபுரியும் அருட்தந்தையர்களும் சேர்ந்து ஆயர் இல்லத்தில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மறைபரப்புத்தளங்கள் உருவாக்குதல் மற்றும் வளர்ச்சியின்



அடுத்தகட்ட கடமைகள் குறித்து சிந்திக்கவும் தீர்மானங்கள் எடுக்கவும் சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

*MIDS சமூகப்பணி நிறுவனம் சார்பாக **MIDS மதுரை Region** என்ற பிரிவில் சமூகப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் மதுரை வேடர்புளியன்குளம் மறைபரப்பு தளத்தில் இரண்டு சுயஉதவிக் குழுக்களும் தேனி, தேவதானம்பட்டி மறைபரப்பு தளத்தில் ஐந்து சுயஉதவி குழுக்களும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

9-11-2023 அன்று ஏழு குழுக்களுக்கும் சிறுகுறு சுயதொழில்கள் செய்து முன்னேறுவதற்காக ரூ10,000/- லோண் கொடுக்கப்பட்டது. திரு. தேவராஜ் மார்த்தாண்டம் அவர்களால் வகுப்புகள் எடுக்கப்பட்டது. இதில் அனைத்து குழு உறுப்பினர்களும், அருட்தந்தை ஜோஸ் பாறவிளை, அருட்தந்தை சஜித் பிரான்சிஸ் மற்றும் அருட்தந்தை பெனட் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

### தேவதானம்பட்டி மறைபரப்புதளம்

தேவதானம்பட்டி மறைபரப்பு தளத்தில் அருட்தந்தை சஜித் பிரான்சிஸ் சிறப்பாக பணிபுரிந்து வருகின்றார்கள். கடந்த நான்கு ஆண்டுகளாக அங்கு Tuition வகுப்புகள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இன்னும் சிறப்பாக நடத்தவும், பிள்ளைகளின் வசதிக்காக வேண்டி 24-09-2023 அன்று புதிய tution centre கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மேதகு ஆயர் வின்செனட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. அதில் பல குருக்களும் அருட்கன்னியர்களும், இறைமக்களும் சிறப்பாக மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### திருச்சி மறைபரப்பு தளம்

திருச்சி மறைபரப்பு தளமானது அருட்தந்தை ரெதீஸ் ரிச்சார்டு அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக வளர்ந்து வருகின்றது. பேராசிரியர் திரு. அகஸ்டின் அவர்களின் இல்லத்தின்

மேல்தளத்தில்தான் செயல்பட்டு வருகின்றது. ஞாயிற்றுக் கிழமைதோறும் திருப்பலியும், மறைக்கல்வியும் நடைபெறும்.

திருச்சி ஓலையூர் என்னும் இடத்தில் சென்ற ஆண்டு 12 சென்று நிலம் வாங்கப்பட்டது. தற்போது அவ்விடத்தில் மக்கள் என்றும் கூடுவதற்கும், திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் வேண்டி ஜெபக்கூடம் கட்டுவதற்கான முயற்சியும் எடுக்கப்பட்டது. மக்களின் தண்ணீர் வசதிக்காக குழாய்கிணறு தோண்டப்பட்டு சிறிய கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது.

**மதுரை மறைபரப்பு தளம்**

மதுரை மறைபரப்புத்தளத்தில் 09-08-2023 அன்று திருவிழா நடைப்பெற்றது. இவ்விழாவில் மறைப்பரப்புதளங்களில் பணிபுரியும் அனைத்து அருட்தந்தையர்களும், அருட்கன்னியர்களும், வேதியர் திரு.சத்தியநேசன் அவர்களும், மறைத்தள பணியாளர் அருட்தந்தை ஜோஸ் அவர்களும், மறைத்தள பங்குமக்கள் அனைவரும் கலந்துக் கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

**நல்லநாதபுரம் களக்காடு மறைபரப்பு தளம்**

நல்லநாதபுரம் களக்காடு மறைபரப்புதளத்தில் அருட்தந்தை பெனட் செயல்பட்டு வருகின்றார்கள். இம்மறைபரப்புத்தளம் கடந்த ஓராண்டாக தனிநபர் ஒருவரின் குருசடியில் மக்கள் கூடி ஞாயிறு திருப்பலியும், மறைக்கல்வியும் நடத்தி வந்தார்கள். கடந்த 3-11-2023 அன்று சொந்தமாக 30 சென்று நிலம் மறைமாவட்டத்தால் வாங்கப்பட்டது. 15-11-2023 ஆம் தேதியிலிருந்து புதன்கிழமைகள் தோறும் அருள்வாழ்விய ஜெபம் இல்லந்தோறும் செல்ல ஆரம்பித்தனர். 1-12-2023 அன்று முதல் மாணவ மாணவிகளுக்கு tutiton வகுப்புகள் ஆரம்பமாக உள்ளது. வருகின்ற 3-12-2023 அன்று ஞாயிற்றுக்கிழமை திருமதி. விமலா அவர்கள் இல்லத்தின் மேல்தளத்தில் வைத்து கன்வென்சன் திருப்பலி மற்றும் கலைநிகழ்ச்சிகளாக முதல் திருவிழா எளிமையான முறையில் நடைபெற உள்ளது.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட ஊடகப்பணிக்குழு செய்திகள்

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையானது ஒவ்வொரு ஆண்டும் மங்கள வாழ்த்துக்காலத்தில் “சக்கரியாவுடனான அறிவிப்பு” ஞாயிறை தகவல் தொடர்பு தினமாக கொண்டாடுகிறது. மார்த்தாண்டம் மறைமாவட்ட ஊடகப் பணிக்குழு முன்னின்று நடத்திய தகவல் தொடர்பு தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் 19-11-2023 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து சரியாக 2 மணிக்கு ஆரம்பமானது. இந்நிகழ்விற்கு மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமை தாங்கினார்கள். மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ்பிறைட் தந்தை அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் மலங்கரை விளக்கு வாசகர்கள், முகவர்கள், நன்கொடையாளர்கள், ஊடகபணிக்குழு நண்பர்கள் என நூற்றிற்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டனர். மலங்கரை விளக்கு சார்பாக நடத்தப்பட்ட “இறையறிவில் வளர்வோம்” என்ற வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களை பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அதுபோலவே TMCM ஊடகப்பணி குழு சார்பாக நடத்தப்பட்ட “விசுவாச போராட்டம்” என்னும் குறும்பட போட்டியில் பங்குபெற்று முதல் மூன்று இடங்களை பெற்றுக்கொண்ட மரியாகிரி, மஞ்சத்தோப்பு, வெட்டுகுழி போன்ற பங்குகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.







# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை மரிய அற்புதம்
டிசம்பர் 08



அருட்தந்தை மரியதாசன்
டிசம்பர் 08



அருட்தந்தை ஏசுதாஸ்
டிசம்பர் 25



அருட்தந்தை பார்பெல்லோ கிறிஸ்டஸ்
டிசம்பர் 25



அருட்தந்தை
வினு இம்மானுவேல்
டிசம்பர் 25



அருட்தந்தை அருள்தாஸ்
டிசம்பர் 27



அருட்தந்தை ஜாண். எஸ்
டிசம்பர் 27



அருட்தந்தை அருள்ஷைஜு
டிசம்பர் 27



அருட்தந்தை ஜெபின் ஜாண்
டிசம்பர் 27



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## கோல்பிங் தின விழா

கோல்பிங் இந்தியா சார்பாக அடோல்ப் கோல்பிங் அவர்களின் நினைவு நாளை அனுசரிக்கும் விதமாக ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 21-ம் நாள் கோல்பிங் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டிற்கான கோல்பிங் தின கொண்டாட்டமானது 21.10.2023 அன்று மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டது. விழா துவக்கமாக மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நன்றி திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பின்னர் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கோல்பிங் இயக்கத்தின் பொதுக்குழு தலைவர் திரு. சசன்குமார் அவர்கள் விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். பின்னர் மார்த்தாண்டம் மறைமாவட்ட கோல்பிங் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் அறிமுக உரையாற்றினார்கள். தொடர்ந்து மேதகு ஆயர் வின்செென்ட் மார் பவுலோஸ் அவர்கள் அளித்த சிறப்பு செய்தியில் கோல்பிங் குடும்பங்களின் வளர்ச்சி மற்றும் அவற்றின் திட்டங்கள் வழியாக அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரங்கள் உயர்வடைந்து வருகின்றன. மேலும் இத்திட்டம் பல்வேறு வளர்ச்சி நிலைகளை எட்ட வேண்டும் என்று வாழ்த்தினார்கள். அதனை தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்பட்ட கோல்பிங் குடும்ப பொறுப்பாளர்ளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர் இறுதி ஜெபத்துடன் விழா நிறைவு பெற்றது. இவ்விழாவில் மொத்தம் 816 கோல்பிங் குடும்ப பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## தளிர்கள் உலகம் – குழந்தைகள் தின விழா

தளிர்கள் உலக பயனாளிகளுக்கான குழந்தைகள் தின விழா 11.11.2023 அன்று மிட்ஸ் கலை அரங்கில் வைத்து நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையில்

நடைபெற்ற இவ்விழாவில் மலங்கரை ஸ்கூல் ஆப் காமேர்ஸ் கல்லூரியின் இயக்குநர் திரு. சேவியர் தாஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். விழாவில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையுரையாற்றி குழந்தைகளை வாழ்த்தினார்கள். 12-ம் வகுப்பில் முதலிடம் பெற்ற மாணவி டென்சிதா தனது வெற்றி அனுபவத்தை பகிர்ந்தார்கள். மாணவி மனோலின்ஸ்டெபி குழந்தைகள் தின செய்தி வழங்கினார்கள். பின்னர் சிறப்பு விருந்தினர் திரு. சேவியர் தாஸ் மற்றும் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் ஆகியோர் குழந்தைகள் தின வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து 12-ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு கேடயம் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு மதிய உணவுடன் விழாவானது நிறைவு பெற்றது. இவ்விழாவில் மாணவ மாணவிகள் அவர்களின் பெற்றோர்கள் என மொத்தம் 427 பேர் கலந்து கொண்டனர்.

**நலத்திட்ட உதவிகள்**

06.11.2023 அன்று நாகர்கோவில் பணிமண்டலத்திற்குட்பட்ட மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 46 உறுப்பினர்களுக்கு நபருக்கு 10 வான்கோழிகள் வீதம் 460 வான்கோழிகள் குறைந்த விலைக்கு வழங்கப்பட்டன. 17.11.2023 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக 14 சுய உதவி குழுக்களில் உள்ள 56 உறுப்பினர்களுக்கு ரூபாய் 28,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்**

1. 19.10.2023 அன்று Sriram Cancer Care Centre மற்றும் மிட்ஸ் நிறுவனமும் இணைந்து கிறிஸ்துவிளாகம் ஆலய வளாகத்தில் வைத்து இலவச புற்றுநோய் பரிசோதனை முகாமினை நடத்தியது. இந்த முகாமில் 30 பயனாளிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

2. 23.10.2023 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் முன்னாள் பயனாளிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் ஆஸ்தி



அமைப்பின் வருடாந்திர கூடுகையானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தினை திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். உறுப்பினர்கள் குழு வாரியாக பிரிக்கப்பட்டு ஊடக போதையிலிருந்து உங்களை பாதுகாத்து கொள்வது எப்படி என்னும் தலைப்பில் கருத்து பகிர்வு நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் 31 ஆஸ்தி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

3. 03.11.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து ஆரி தையல் கலை பயிற்சியின் நிறைவு விழா நடைபெற்றது. இந்த நிகழ்வினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையேற்று நடத்தி பயிற்சியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

4. 04.11.2023 அன்று மிட்ஸ் தளிர்கள் உலகம் திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 16 பயனாளிகளுக்கான வழிகாட்டுதல் பயிற்சி மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்களால் நடத்தப்பட்டது.

5. 08.11.2023 அன்று பூதப்பாண்டியில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் தலைமையில் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப், மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. பேட்ரிக் ஆன்றனி முன்னிலையில் நாகர்கோவில் பணிமண்டலங்களில் உள்ள சுய உதவி குழு உறுப்பினர்களுக்கான ஆரி தையல் கலை பயிற்சி வகுப்புகள் துவங்கி வைக்கப்பட்டன.

6. 13.11.2023 அன்று மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்களின் பிரியாவிடை நிகழ்ச்சியும் புதிய இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்களின் பொறுப்பு நியமன நிகழ்வும் ஆயர் மேதகு வின்செண்ட மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் மண்டல இயக்குநர்கள், மலங்கரை ஸ்கூல் ஆப் காமர்ஸ் கல்லூரியின் பணியாளர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

### குடிமைப் பயிற்சி முகாம்

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 08.11.2023 அன்று முதல் 10.11.2023 வரை மூன்று நாட்கள் குடிமைப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த குடிமைப் பயிற்சி முகாமானது எம் கல்லூரியின் தாளாளரும் பேரருட் தந்தையுமான பெர்னாடு அடிகளார் அவர்கள் தலைமையில், அருட்தந்தை. ஷிஜு ஜோஸ் அடிகளார் (நிதிக் காப்பாளர்) அவர்கள் முன்னிலையில் கல்லூரி முதல்வர் முனைவர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் வழிகாட்டுதலில் இறைவணக்கப்பாடலுடன் ஆரம்பமானது. குடிமைப் பயிற்சியின் மூன்று நாட்களும் சிறப்பு வகுப்புகள் நடைபெற்றது.

## MCYM
*Youth Apostolate*

2023 நவம்பர் மாதம் 7-ம் தேதி செவ்வாய்கிழமை மறைவட்ட இயக்குநர்கள் மற்றும் அருட்சகோதரி ஊக்குநர்கள் கூடுகையானது MCYM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தையர்களின் தலைமையில் நடைபெற்றது .

ஆன்மீகம் மற்றும் தலைமைத்துவ பயிற்சியின் இறுதி வகுப்பானது நவம்பர் மாதம் 10,11 ஆகிய தேதிகளில் இலவுவிளை மார் எஃப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. 10-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5:00 மணிக்கு ஆரம்பித்து 11-ம் தேதி சனிக்கிழமை மாலை 5:00 மணிக்கு நிறைவடைந்தது. இளையோர்கள் ஆர்வத்துடன் இந்த வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.



## மேரி மக்கள் துறவற சபை

### மாகாணத்தலைவி மதர் அனிலா கிறிஸ்டி அவர்களின் நாம விழா

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாண தலைவி மதர் அனிலா கிறிஸ்டி அவர்களின் நாம விழா கொண்டாட்டம் 22.11.2023 அன்று மாலை 4 மணிக்கு ஜெபத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் திருப்பலியும், தொடர்ந்து வாழ்த்துக் கூட்டமும் நடைபெற்றது. இதில் ஏராளமான அருட்தந்தையர்களும் அருள் சகோதரிகளும் கலந்து கொண்டு மதர் அவர்களுக்காக ஜெபித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

### இறைவனடி சேர்ந்தார்

புனித சூசையப்பர் மாகாண உறுப்பினரான அருட்சகோதரி கில்டா டி.எம் (82) அவர்கள் 27.10.2023 வெள்ளிக்கிழமை காலை 1.15 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்கள்.



அருட்சகோதரி கில்டா டி.எம் (82)

இவர் மங்குழி பங்கை சார்ந்த காலம் சென்ற திரு. இராயப்பன், திருமதி. மரிய செல்வம் இவர்களின் 4-வது மகள். இவர் மார்த்தாண்டம் மறைமாவட்டத் திற்குட்பட்ட கிராத்தூர், நட்டாலம், தானிப்பாடி, கொடுங்குளம் போன்ற பள்ளிக்கூடங்களில் இடைநிலை ஆசிரியையாகவும், தலைமை ஆசிரியராகவும், சூரியகோடு உயர்நிலை பள்ளியில் ஆசிரியையாகவும் பணியாற்றினார்கள். கிராத்தூர், விமலபுரம்,

ஆதிச்ச விளாகம், சிதறால், கண்ணக்கோடு போன்ற இடங்களில் மறைபரப்பு பணியாளராகவும், கிராத்தூர், அசிசி நிலையம் ஆகிய இடங்களில் துறவற இல்ல தலைவியாகவும் இருந்து பணியாற்றினார்கள்.

அருள்சகோதரி அவர்களின் கல்லறை அடக்கம் 27.10.2024 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மேரி மக்கள் துறவற சபை புனித சூசையப்பர் மாகாண தாய் இல்லத்தில் வைத்து மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான அருட்தந்தையர்களும் அருட் சகோதரிகளும் கலந்து கொண்டனர்.

# MCA
## Diocese of Marthandam

நவம்பர் மாதத்திற்கான MCA கூட்டம் 26.11.2023 ஞாயிற்றுக்கிழமை குழித்துறை மேய்ப்புப்பணி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை ராபின்சன் அடிகளார் சிறப்பு செய்தி வழங்கினார்கள். 2024 ஜனவரி 19, 20, 21 ஆகிய தேதிகளில் பெங்களூருவில் வைத்து நடைபெறும், 2023 ஆம் ஆண்டு இறுதி பொதுக்கூட்டத்தில் அனைத்து செயற்குழு மற்றும் மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

17.12.2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிறிஸ்துமஸ் விழா ஆயர் தலைமையில் கொண்டாடப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

வழக்கம்போல் இந்த வருடமும் 7 மறைவட்டங்களிலிருந்தும் 5 குடும்பங்கள் வீதம் தேர்வு செய்து 35 ஏழைக்குடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் விழாவின்போது உணவுப்பொட்டலங்கள் வழங்கப்படும் என தீர்மானம் செய்யப்பட்டது.



### மரியாயின் சேனை
# கொமித்சியச் செய்திகள்

நமது மரியாயின் சேனை மார்த்தாண்டம் கொமித்சியம் ஆரம்பிக்கபட்டு 26-01-2023 அன்று 25-வது ஆண்டில் அடியெடுத்து வைத்தது. இந்த சிறப்பு மிகு ஜூபிலி வருடத்தின் நிறைவு விழாவானது வரும் டிசம்பர் மாதம் 30-ம் தேதி சனிக்கிழமை குழித்துறை மார் எஃப்ரேம் வளாகத்தில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. காலை 9:00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நடைபெறும், இவ்விழா நிகழ்வுகளில் அனைத்து அருட்தந்தையர்களும், அருட்கன்னியர்ளும், மரியாயின் சேனையாளர்களும் கலந்து கொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

## நிகழ்வுகள்

1. **சேனை ஆரம்ப ஜெபம்**
2. **ஜெபமாலை**
3. **கூட்டுத் திருப்பலி**

**தலைமை : மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ்**
**மறையுரை : பேரருட்தந்தை சகாயதாஸ்**
**பொதுக்கூட்டம்**
**கலை நிகழ்ச்சிகள்**

## திருமண ஆயத்தப்பயிற்சி

**டிசம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 15, 16 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# மறைவட்ட செய்திகள்

## நாகர்கோவில் மறைவட்டம்

நாகர்கோவில் மறைவட்ட பங்கு பணிதளங்களில் ஆன்மீக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்தோடு, எதிர்கால வளர்ச்சி திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்காக 2023, நவம்பர் மாதம் 29-ம் தியதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மறைவட்ட மேய்ப்புப் பணி அறிவுரை குழுவின் சிறப்புக் கூட்டம், பெருவிளை புனித தேவசகாயம் திருத்தல வளாகத்தில் வைத்து மறைமாவட்ட மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறைமாவட்ட குருகுலமுதல்வர், ஆவண காப்பாளர், நிதி காப்பாளர், மறை வட்டத்தில் பணியாற்றும் அனைத்து அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மேய்ப்பு பணி அறிவுரை குழுவின் உறுப்பினர்கள் மற்றும் இயக்கங்களின் மறைவட்ட தலைவர், செயலர், பொருளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இயக்கங்களின் மறைவட்ட செயலர்கள் தங்கள் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சித்திட்டங்கள் குறித்த அறிக்கையை சுருக்கமாக சமர்ப்பித்தனர். பின்பு ஆயர் அவர்கள் மறைவட்ட வளர்ச்சிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.

### பேராலயக் கட்டுமானபணிக்கான நன்கொடைகள் (2023)

| S.No. | Parish | Amount | S.No. | Parish | Amount |
|---|---|---|---|---|---|
| 1. | Cheruppaloor | 15,000 | 7. | Mr. Rajendra Babu Mecode | 50,000 |
| 2. | Muthalar | 3,200 | 8. | Mr. Sathia Raj Adaikkakuzhi | 10,000 |
| 3. | Vimalapuram | 10,000 | 9. | Keezhmancode | 4,830 |
| 4. | Alwarcoil | 4,800 | 10. | Mariagiri | 1,00,000 |
| 5. | Chellamkonam | 57,300 | | | |
| 6. | Beach Road | 1,220 | | | |



## ஆயரின் நவம்பர் மாத நிகழ்வுகள்



- 1 ➤ அருட்தந்தை ஆன்றணி அவர்களின் முதல் நினைவுத் திருப்பலி மற்றும் தூப மன்றாட்டிற்கு தலைமைத் தாங்கினார்.
- 1 ➤ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.
- 1 ➤ மார்த்தாண்டம் மறைமாவட்ட மறைக்கல்வி மாணவர்களுக்கான கலைவிழா நிகழ்விற்கு தலைமை தாங்கி பரிசுகளை வழங்கினார்.
- 3 ➤ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.
- 3 ➤ புனித எப்ரேம் ம.சி.க உயர் நிலை பள்ளி ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.
- 4 ➤ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

5 ➢ ஊரம்புவிளை ஆலய ஜூபிலி நிறைவு விழாவில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

5 ➢ விரிகோடு சி.எஸ்.ஐ. ஆலயத்தில் நடைபெற்ற மறைக்கல்வி விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

7 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்களுக்கான மாதாந்திர தியானத்தில் கலந்துக் கொண்டார்.

10 ➢ தூய மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தில் இறையியல் பயிலும் பொதுநிலையினருக்கு தூய ஆவியியல் மற்றும் A Ú° « Vp (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

11 ➢ போபாலில் நடைபெற்ற இளையோர் இயக்க சிறப்பு கூடுகையில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு வகுப்பு எடுத்தார்.

12 ➢ Shalom Home-ல் திருப்பலி நிறைவேற்றினார்.

14 ➢ செல்லங்கோணம் பள்ளி ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

16 ➢ தூய எப்ரேம் இளம் குருத்துவ பயிற்சியகத்தின் ஆசிரியர் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

17 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

18 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

18 ➢ தக்கலை ஆயர் இல்லத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவையின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

19 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மார்த்தாண்டம் மறைமாவட்ட தகவல் தொடர்பு தின கொண்டாட்ட கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

19 ➢ களியக்காவிளை கொல்லங்கோடு மறைவட்டங்கள் இணைந்து நடத்திய கிறிஸ்து அரசர் கொண்டாட்ட கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.



20 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

20 ➢ காதோலிக்கேட் மையத்தில் நடைபெற்ற திருத்தொண்டர் களுக்கான சிறப்பு பயிற்சி முகாமில் கலந்துகொண்டு வகுப்பு எடுத்தார்.

21 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

21 ➢ கிராத்தூர் உயர் நிலைப் பள்ளி ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

22 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

22 ➢ மேரி மக்கள் துறவற சபையின் மார்த்தாண்டம் மாகாணத் தலைவி மதர் அனிலா கிறிஸ்டி அவர்களின் நாமவிழா திருப்பலி மற்றும் கொண்டாட்ட நிகழ்விற்கு தலைமைத் தாங்கினார்.

24 ➢ திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு ஆயர் பேரவையின் Labour Commission கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

25 ➢ மும்பையில் நடைபெற்ற இளையோர் இயக்க சிறப்பு கூடுகையில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு வகுப்பு எடுத்தார்.

26 ➢ மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலய இறுதி நாள் திருவிழா நிகழ்வில் கலந்துக்கொண்டு திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

26 ➢ சிவகங்கை மறைமாவட்ட ஆயர் அருட்பொழிவு நிகழ்வில் கலந்துக் கொண்டார்.

27 ➢ முளவிளை பள்ளி நூற்றாண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.12.2023 | Friday | 6.45 am<br>3.00 pm | Memorial Mass<br>School Day | Puthur<br>Mariagiri |
| 02.12.2023 | Saturday | 9.45 am<br><br><br>12.00 pm<br><br>5.30 pm | Inauguration – All India Dorn Healers Association<br>*Thalirkar Ulakam* Christmas gathering<br>YMCA - Christmas Celebration | YMCA - Kanyakumari<br><br><br>MIDS<br><br>Vettumani |
| 03.12.2023 | Sunday | 7.15 am<br>2.30 pm<br>5.30 pm | Holy Mass<br>St. Thomas Day<br>Holy Mass | Tuticorin<br>Thiruvithancode<br>Mecode |
| 04.12.2023 | Monday | | Class | Major Seminary TVM |
| 05.12.2023 | Tuesday | | Class | Major Seminary TVM |
| 06.12.2023 | Wednesday | | Class | Major Seminary TVM |
| 08.12.2023 | Friday | 7.30 am<br>10.0 am | Christmas Message<br>Diaconate | Neyyoor<br>Shanthi Ashramam |
| 09.12.2023 | Saturday | 10.00am<br><br>2.45 pm<br><br>5.00 pm | UCC - Christmas Celebration<br>Vincent de Paul Annual Celebration<br>UCC - Christmas Celebration | Bishop's House<br><br>Pastoral Centre<br><br>Nagercoil |
| 10.12.2023 | Sunday | 8.00 am<br>2.00 pm<br>4.00 pm<br>8.00 pm | Holy Mass<br>MCYM Senate Meeting<br>Holy Mass<br>Christmas Celebration | Vimalapuram<br><br>Anaapottai<br>Nadaikkavu |



| | | | | |
|---|---|---|---|---|
| 11.12.2023 | Monday | | Class | Major Seminary TVM |
| 12.12.2023 | Tuesday | | Class | Major Seminary TVM |
| 13.12.2023 | Wednesday | 11.00 am | Holy Mass | Ravusapatti |
| 14.12.2023 | Thursday | 2.00 pm | DM Convent Blessing | Devadhanampatti |
| 15.12.2023 | Friday | 10.00am<br>2.30 pm | SHG X'mas Celebration<br>Mar Ivanios School Day | MIDS<br>Kuzhithurai |
| 16.12.2023 | Saturday | 8.35 am<br>3.00 pm<br><br>5.00 pm | Class<br>Nithi Ltd. X'mas Celebration<br>X'ms Celebration - Laity Commission | Major Seminary TVM<br><br>Bishop's House<br><br>Kuzhithurai |
| 17.12.2023 | Sunday | 2.00 pm<br>4.00 pm<br>6.00 pm | CWM X'mas Celebration<br>MCA X'mas Celebration<br>UCC X'mas Celebration | Thengapattanam<br>Pastoral Centre<br>Melpuram |
| 19.12.2023 | Tuesday | 9.30 am | Monthly Recollection | Bishop's House |
| 22.12.2023 | Friday | 2.00 pm<br>6.00 pm | UCCC X'mas Celebration<br>X'mas Celebration | Marthandam<br>Minor Seminary |
| 26.12.2023 | Tuesday | 4.00 pm | Jubilee Message | St. Xavier's - Palyamkottai |
| 27.12.2023 | Wednesday | 11.00 am | Baptism | Kirathoor |
| 28.12.2023 | Thursday | 10.00 am<br>5.00 pm | Marriage<br>Holy Mass | Nadaikkavu<br>Kovilpatti |
| 29.12.2023 | Friday | 9.30 to 4.00 pm | Religious Day | Christuraja – Mtm |
| 30.12.2023 | Saturday | 10.00am | Legion of Mary Jubilee Celebration | |
| 31.12.2023 | Sunday | 8.30 am<br>5.00 pm | First Mass<br>Holy Mass | Vayalathala<br>Puliyoor |


இளங்குருமட செய்திகள்
Staff Meetting
மறைபரப்பாளர்களின் அனுபவ பகிர்வு


ஊடகப் பணிக்குழு
தகவல் தொடர்பு தினம் கொண்டாட்டம்


DM Convent
நாமவிழா கொண்டாட்டம்


MIDS
கோல்பிங் தினவிழா கொண்டாட்டம்


நாகர்கோவில் மறைவட்டம்
மேய்ப்புப் பணி அறிவுரை குழு கூட்டம்


MCYM
தலைமைத்துவ பயிற்சி வகுப்பு


Mar Chrysostom B.Ed College
குடிமை பயிற்சி முகாம்


மறைபரப்புத்தள செய்திகள்